# என் சரிதை

ஈழத்துக்கவிஞர்
அப்துல் காதிர் லெப்பை

தமிழ் மன்றம்
கல்ஹின்ன, கண்டி
ஸ்ரீலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. எ. எம். எ. அஸீஸ் தொடர்பு

நற்பிட்டிமுனையிற் சேவையாற்றும்போதே இத் தொடர்பு ஏற்பட்டதென்று முன்னர் கூறினேன். எனது கவிதைகள் தாருல் இஸ்லாத்தில் வெளி வருவதைக் கண்ட ஜனாப் எ. எம். எ. அஸீஸ் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'அதான்' என்ற புனைப் பெயருட் புதைந்து கொண் டிருப்பது யார் என்று தேடிக் கொண்டிருந்தார்.

அக்காலத்தில் முஸ்லிம்களுக்குள் ஸி.ஸி.எஸ். பதவி பெற்றவரும், சமூக சேவையில் ஆர்வமுள்ளவரும், தமிழ் அறிஞரும், கல்முனை முஸ்லிம்களால் மதிக்கப் பட்டவருமாக ஜனாப் அஸீஸ் அவர்கள் இருந்தார்கள். இவர் கல்முனையில் உதவி அரசாங்க அதிபராக (எ. ஜீ. எ) இருக்கும்போது ஒருநாள் இவரைச் சந்திக்க இவரது வீட்டுக்குச் சாதாரணமாகச் சென்றேன்.

என்னைக் கண்டதும் இன்முகத்துடன் வரவேற்று 'நீங்கள் யார்' என்று கேட்டார். நற்பிட்டிமுனைத் தமிழ்ப் பாடசாலையில் உதவியாசிரியராகச் சேவை யாற்றிக் கொண்டு, கல்முனையில் தங்கியிருக்கிறேன் என்றேன். அன்று அவரது மேசையில் தாருல் இஸ்லாம் பத்திரிகை ஒன்று இருந்தது. அதில் எனது கவிதையொன்று முதற் பக்கத்திலேயே காணப் பட்டது. அக்கவிதையைக் கண்டதும், 'அதான்' என்ற புனைப் பெயரில் நானே இந்தக் கவிதைகளை எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று வாய்விட்டுச் சொல்லி விட்டேன்.

இதைக் கேட்டதும் அவர் ஆனந்தக் களிப்பால் என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார். இதை எழுதும்போது எனக்கு அழுகை வந்து விட்டது. இதிலிருந்து எங்களுக்கிடையிலுள்ள தொடர்பு மிக நெருக்கமாக வளர்ந்து கொண்டு வந்தது. இதன் மூலம் எம்மிருவருக்குமிடையில் சிந்தனைப் பரி மாற்றம் தொடர்ந்து நடைபெற்றது. அவர் காலமா வதற்கு இரு வாரங்களுக்கு முன்னர், இறுதியாக ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

இவ்வாறு இருவரும் நெருங்கிப் பழகியதனால், கல்முனையில் மாலைவேளைகளில் அவரது வீட்டுக்குச் சென்று எங்கள் சிந்தனைகளைப் பரிமாறிக் கொள்வோம். ஒரு நாள் எங்களது உரையாடலின்போது, "நான் மாத்திரம் ஸி. ஸி. எஸ் ஸாக இருப்பதிற் பெருமையில்லை. நமக்குள் பலர் ஸி. ஸி. எஸ்ஸாக உருவாக வேண்டும். இதற்கு ஒரே வழி நமது மாணவர்கள் உயர்தரக் கல்வியில் முன்னேற வேண்டும். இதற்காக நமக்கு ஒரு தனி சர்வகலாசாலை இப்போது தேவையில்லை. இப்போதுள்ள சர்வகலாசாலையிலேயே எமது மாணவர்கள் நுழைய வேண்டும். இதற்கு நாம் செய்யக் கூடிய ஒரே வழி முஸ்லிம் கல்விச் சகாய நிதி ஒன்றை ஆரம்பித்து அவர்களை ஊக்குவிப்பதாகும்" என்று சொன்னார்.

இதற்கு என்ன வழியென்று இருவரும் யோசித்தோம். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தோம். 'முஸ்லிம் முன்னேற்றச் சங்கம்' என ஒரு சங்கத்தைக் கல்முனையில் உருவாக்கி அதன் மூலம் இந்தச் சகாய நிதியை அங்குரார்ப்பணம் செய்வோமென்று தீர்மானித்தோம்.

முஸ்லிம் முன்னேற்றச் சங்கத்திற்குச் செயலாளர்களாகச் சம்மாந்துறை மீராலெப்பை, காத்தான்குடி எம். எம். முகம்மது ஆகிய இருவரையும் தெரிவு செய்தோம்.

இச்சங்கத்தின் கூட்டம், பாணமையிலிருந்து காத்தான்குடி வரை ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வன்னியமார் பிரிவிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவ்வாறு சங்கம் இயங்கிக் கொண்டிருக்கும்போதுதான், முஸ்லிம் கல்விச் சகாய நிதியை அங்குரார்ப்பணம் செய்வதற்காக ஜனப் எம். எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரியப்பரின் சகலனான ஜனப் சரீப் விதானையின் வீட்டில் இரா விருந்துடன் ஒரு கூட்டத்தைக் கூட்டினோம். இக் கூட்டத்திற்கு ஜனப் எம். எஸ். காரியப்பர் முதல் வேறு பலரும் சமுகமளித்திருந்தனர். கூட்டத்தின் நோக்கம் பற்றி நண்பர் ஜனப் எ.எம்.எ. அஸீஸ் விளக்கினார். மற்றும் விரிவான விடயங்களைப் பற்றி என்னைப் பேசுமாறு ஜனப் அஸீஸ் அவர்கள் கூறினார்கள். அதற்கிணங்க முஸ்லிம் கல்விச் சகாய நிதியின் தேவைகளைப் பற்றி விளக்கிக் கூறினேன். அவற்றைக் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்த சகலரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். அன்றே முஸ்லிம் கல்விச் சகாய நிதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.